

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் கல்லூரி மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் புதிய விடுதி கற்றல் கற்பித்தல் கூடம் கட்டப்பட்டு வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் (26.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இவ்விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களிடம் குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். உடன் அரசு அதிகாரிகள் எஸ்.எஸ்.மகேஸ்வரன், திருமதி.கவிதா, திருமதி. தேன்மொழி, தாட்கோ வி.ராமதாஸ், கண்ணன் மற்றும் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.




ஈரோடு மாவட்டம், பவானிசாகர் பேரூராட்சி பனை நாயக்கன் கோட்டை வாய்க்கால் கரையோர பகுதியில் பனை மர விதை நடும் பணியினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### பி.ஜே.பி. அரசு வாக்காளர் பட்டியலில் குளறுபடி செய்ய முயற்சி!

# புதுச்சேரி - காரைக்கால் மாநில வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநில அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் ஆலோசனை வழங்கினார்!

காரைக்கால், அக்.28-

வரும் சட்டமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை கைப்பற்ற வேண்டும் என்ற கனவுடன் பி.ஜே.பி. அரசு வாக்காளர்கள் பட்டியல் திருத்தம் என்ற பெயரில் எதிர்க்கட்சியினர் வாக்குகளை சிதறடிக்கும் செயலில் ஈடுபட்டு வருவதாக காரைக்கால் மாவட்ட தி.மு.க. அமைப்பாளரும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் கூறினார். எனவே தி.மு.க. வாக்கு சாவடி முகவர்கள் கவனத்துடன் வாக்காளர்கள் பட்டியலை சரிபார்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் அடுத்த பி.எஸ்.ஆர். நகரில் மாவட்ட திமுக சார்பில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்த வாக்கு சாவடி முகவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

நிரவி திருப்பட்டினம் திமுக சட்டமன்ற உறுப்பினர் நாக.தியாகராஜன் முன்னிலையிலும், காரைக்கால் மாவட்ட திமுக அமைப்பாளரும், திமுக சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் தலைமையிலும் கூட்டம் நடைபெற்றது.

அப்போது பேசிய காரைக்கால் மாவட்ட திமுக அமைப்பாளரும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் வரும் சட்டமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வாக்குகளை சிதறடிக்கும் வகையில் சிறப்பு வாக்காளர் திருத்த பட்டியல் என்ற பெயரில் ஒன்றிய அரசு வாக்காளர்கள் பெயர்களை நீக்கம் செய்து வருவது பிற மாநிலங்களே சாட்சி என கூறினார்.

ஆகையால் தி.மு.க. வாக்கு சாவடி முகவர்கள் ஒன்றிய அரசின் இத்தகைய சூழ்ச்சியை முறியடிக்கும் வகையில் வாக்காளர்கள் பட்டியலை மிகவும் கவனத்துடன் சரிபார்க்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க. துணை அமைப்பாளர் காசிநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஐ.முஹம்மது ரிஃபாஸ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் அமுதா ஆறுமுகம் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்றனர்.



புதுச்சேரி மாநிலம் காரைக்கால் அடுத்த பி.எஸ்.ஆர். நகரில் மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்த வாக்கு சாவடி முகவர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. நிரவி திருப்பட்டினம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் நாக.தியாகராஜன் முன்னிலையிலும், காரைக்கால் மாவட்ட தி.மு.க. அமைப்பாளரும், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச். நாஜிம் தலைமையிலும் கூட்டம் நடைபெற்றது.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்து மருத்துவ பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாலதி நாராயணசாமி, கதிரவன், ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், குமரேசன் அமானுல்லா, பார்த்திபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் மேற்கு ஒன்றியம் கீரிப்பட்டி பேரூராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மேற்கு ஒன்றிய செயலாளர் இரா.வரதராஜன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய விசாரணை நடத்தி தீர்வு காணப்பட்ட உத்தரவு ஆணையத்தை வழங்கினார். அப்போது பேரூராட்சி தலைவர் தேன்மொழி, செயல் அலுவலர் வெங்கடாசலம் ,பேரூர் செயலாளர் காங்கமுத்து, சசிகுமார், மல்லியகரை ராஜா, சதீஷ்குமார், பார்த்திபன், சண்முகம், ரஜினி, பழனிவேல், ஆதிமூலம், முருகன், மாதவன், கிருஷ்ணமூர்த்தி, அன்பழகன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### ரூ.38 கோடி செலவில் "இந்தியாவில் முதல்முறையாக"

# தமிழ்நாட்டில் 1 முதல் 14 வயதுடைய சிறுமிகளுக்கு இலவச புற்றுநோய் தடுப்பூசி போடும் திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வில் தகவல்!

சென்னை, அக்.28-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (26.10.2025) சென்னை தீவுத்திடலில், தன்னார்வ அமைப்பு மற்றும் ரோட்டரி சார்பில் "ஒரு நடை ஒரு நம்பிக்கை" என்ற பெயரில் 16வது ஆண்டு மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபயண நிகழ்ச்சியை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபயணம் தொடக்கம்

இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு முன்பாக சுமார் 13 கி.மீ அளவில் நடந்துள்ளேன். வாரத்திற்கு ஒரு முறை நடந்தால் போதும் என்று பலர் நினைக்கிறார்கள். வாரம் முழுவதும் நடக்க வேண்டும் என்கின்ற விழிப்புணர்வில் இந்த மாரத்தான் போட்டி நடைபெற்றுள்ளது. இன்றைய நாளில் தினந்தோறும் நடைப்பயிற்சி செய்பவர்களுக்கு புற்றுநோய் பாதிப்பு வராது என்று அறிவியல் ஆராய்ச்சிகள் மூலம் சொல்லப்பட்டு வருகிறது. இந்த மாரத்தான் நோக்கம் பெண்களுக்கு வருகின்ற மார்பக புற்றுநோய், வாய்ப்புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய் போன்றவற்றின் மூலம் பெண்களுக்கு இப்பிரச்சினை வராமல் தடுப்பதற்கு காலையில் ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். புற்றுநோய் மட்டுமல்ல இருதய பாதிப்புகளும் தடுக்கப்படுகிறது. ஆகையால் ரோட்டரி சங்கம் இந்த நிகழ்ச்சியினை சுமார் 16 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. ரோட்டரி சங்கம் என்பது உலகளவில் நம்பர் 1 தொண்டு நிறுவனமாக தற்போது உள்ளது. தற்போது உலகில் போலியோ என்கின்ற நோய் இல்லாமல் இருப்பதற்கு ரோட்டரி சங்கம் மட்டுமே பெரிய அளவில் காரணம். தற்போது கால் நூற்றாண்டிற்கு பிறகு போலியோ நோய் கொஞ்சம் கொஞ்சமாக தலைதூக்குகிறது. தற்போது தமிழ்நாட்டில் 6 மாவட்டத்திற்கு மட்டும் போலியோ தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.38 கோடி செலவில் புற்றுநோய்க்கு தடுப்பூசி போட ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். தற்போது டெண்டர் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது தனியார் மருத்துவமனையில் புற்றுநோய் தடுப்பூசி போட ரூ.15,000/- முதல் ரூ.20,000/- வரை செலவாகும். ஏழ்மை நிலையில் உள்ள 1 முதல் 14 வயதுடைய பெண்களுக்கு இலவசமாக தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு ஏதுவாக முதலமைச்சர் முடிவெடுத்திருக்கிறார்கள். கோவிட் காலங்களில் கூட கோவிட் தடுப்பூசி தனியார் மருத்துவமனைகளில் பணம் கொடுத்து போடப்பட்டிருந்த நிலையில் மாநில அரசு ஒன்றிய அரசிற்கு ரூ.100 கோடி பணம் கொடுத்து இலவசமாக போட முயற்சி




செய்த நிலையில்தான் இந்தியா முழுமைக்கும் உள்ள மாநிலங்களுக்கு தடுப்பூசி போட ஒன்றிய அரசு முடிவு செய்தது. தமிழ்நாட்டில் புற்றுநோய்க்கு இலவசமாக தடுப்பூசி போட உள்ள நிலையில் இந்தியா முழுமைக்கும் செயல்படுத்த வாய்ப்பு இருக்கிறது. உலக அளவில் 1 இலட்சம் மக்கள் தொகைக்கு 58 பேருக்கு புற்றுநோய் பாதிப்பு ஏற்படுகிறது எனவும், இந்திய அளவில் 1 இலட்சம் மக்கள் தொகைக்கு 28 பேருக்கும் மகளிருக்கு மார்பக புற்றுநோய் ஏற்படுகிறது. புற்றுநோய் பாதிப்புகள் அதிகமாக வருகிறது என்று தமிழ்நாட்டில் ஈரோடு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் 2023 நவம்பர் 22 ஆம் தேதி Screening வேலை தொடங்கினோம். தற்போது தமிழ்நாடு முழுவதும் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு புற்றுநோய் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. அதற்கான ஒரு விழிப்புணர்வாக ரோட்டரி சங்கம் இந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நான் மேயராக இருந்த போது சென்னை லயன்ஸ் சங்கமும், பெருநகர சென்னை மாநகராட்சியும் இணைந்து வடகிழக்கு பருவமழைக்கு மருத்துவ முகாம்கள் நடத்தி லிம்கா புத்தகத்தில் இடம் பெற்று சாதனை படைத்திருந்தோம். அத்தகைய புகழ் ரோட்டரி சங்கத்திற்கு உண்டு. மேலும் எனக்கு 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட விபத்தின் காரணமாக எனது கால் மற்றும் தலையில் பெரிய பாதிப்பு. நான் பிழைக்கமாட்டேன் என்று நிறைய பத்திரிக்கைகளில் எல்லாம் செய்திகள் போட்டார்கள். அந்த செய்தியினை பொய்யாக்கி இன்று ஓட ஆரம்பித்து இன்று வரை 164 மாரத்தான் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். மேலும் வெளிநாடுகளான அமெரிக்கா, கத்தார், ஜப்பான் போன்ற 14 நாடுகளில் ஓடியிருக்கிறேன். இந்தியாவில் உள்ள 36 மாநிலங்களில் 24 மாநிலங்களில் ஓடியிருக்கிறேன். இன்னும் 12 மாநிலங்கள் நிலுவை இருக்கிறது. இன்னும் வடகிழக்கு மாநிலங்களில் ஓடவில்லை. மாரத்தான் போட்டி தொடங்கினால் அங்கேயும் ஓடத் தொடங்கி விடுவேன். மேலும் நடைப்பயிற்சி முடிந்து என்னுடைய சமூக வலைத்தளப்பக்கத்தில் பதிவு செய்யும்போது நான் எங்கேயாவது செல்லும் போது என்னை அமைச்சராகவோ அல்லது முன்னாள் மேயர் என்றோ பார்ப்பத்தில்லை. எங்கே பார்த்தாலும் நடப்பாரே அவர் செல்கிறார் என்று பொதுமக்கள் கூறுகிறார்கள், மேலும் உங்களை பார்த்து நாங்களும் நடைப்பயிற்சி செய்வதாக கூறுகிறார்கள் அது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மரு.சிவகாமி சுந்தரி, மரு.அர்ஜீன் ரங்கராஜன், திரைப்பட நடிகை சஞ்சிதா ஷெட்டி, ரோட்டரி சங்க நிர்வாகிகள் கம்டார், ஸ்ரீதர், ராஜசேகரன் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.டி. தண்டபாணி
### அக்டோபர் 28 (2001)



**கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**